[2015 செப்டம்பர் 2

202—

சார்பு நீதிமன்றம்

***20733 திரு. ஆர். சந்திரசேகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதி, மணப்பாறையில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை தொகுதி, மணப்பாறையில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.*

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாட்டினுடைய நிரந்தர முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன், திருச்சி மாவட்டம், மணப்பாறை சட்டமன்றத் தொகுதியானது திருச்சி-மதுரை தேசிய நெடுஞ்சாலை மற்றும் திருச்சி-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி உள்ளது. இப்பகுதியில் நடக்கும் விபத்து வழக்குகளுக்கு மணப்பாறைக்குத்தான் வர வேண்டியுள்ளது. அதுமட்டுமல்லாது, தற்போது 1,780 விபத்து வழக்குகளும், 525 சிவில் வழக்குகளும், 113 திருமண வழக்குகளும் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட* appeal *வழக்குகளும் நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகளையெல்லாம் துரிதமாக முடிக்க வேண்டுமென்றால், திருச்சிக்குச் செல்ல வேண்டியுள்ளது. திருச்சிக்கும், மணப்பாறை*

2015 செப்டம்பர் 2]

தொகுதிக்குட்பட்ட துவரங்குறிச்சி பகுதிக்கும் இடையே சுமார் 100 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மணப்பாறையில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தால், பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை சார்பு நீதிமன்றம் அமைத்துக் கொடுக்குமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013 ஆம் ஆண்டு மணப்பாறைக்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு அனுமதி வழங்கி, 4 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தார்கள். அந்தத் தொகை போதுமானதாக இல்லை என்று உயர் நீதிமன்றத்தாலும், பொதுப் பணித் துறையாலும் கூறப்பட்டு, திருத்திய மதிப்பீடாக ரூபாய் 8½ கோடி வேண்டும் என்று கேட்டு, அரசுக்குப் பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது. அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமக்கள் அனைவருக்கும் விரைவில் நீதி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நீதிமன்றங்களுக்கான புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், மேம்படுத்தவும், இதுவரை 401 கோடியே 73 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்திலே 363 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஓர் ஊரில் நீதிமன்றம் அமைக்க வேண்டுமெனில், அதற்கான செயற்குறிப்பு நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட வேண்டும். உயர்

நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு பெறப்படும்பட்சத்தில், நீதிமன்றம் அமைப்பது குறித்து அரசு அளவில் பரிசீலனை செய்து, முடிவெடுக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளபடி, மணப்பாறையில் சார்பு நீதிமன்றம் அமைக்க உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு பெறப்படும்பட்சத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலனை செய்யும். அதேபோல, நீதிமன்றம் கட்டுவதற்கு கூடுதல் நிதி வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். அதுவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசெல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

203—

கால்நடை மருத்துவமனை

*** 6874—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம், பெரியசெவலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உளுந்தூர்பேட்டை தொகுதி, பெரியசெவலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். முதலில் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னால்,